படுத்தப்படுகிறது. ஆகவே இந்த ஹெலிகாப்டர் முக்கியப் பிரமுகர்கள் பயணம் செய்வதற்குத் தகுதியாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வண்டலூர்.

* 229 **வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் மற்றும் திரு. சி. இராம லிங்கம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்):** மாண்புமிகு செய்தி-அற நிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) வண்டலூரில், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அமைக்கும் திட்டத்தின் முழுப்பணிகளும் நிறைவேறி விட்டனவா?

(இ) தற்பொழுது அங்குள்ள பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றின் விவரங்கள் யாவை?

(உ) உயிரியல் பூங்காவைச் சுற்றிப் பார்ப்பதற்கு வசதியாக, (i) மினி இரயில் விடவும், (ii) வாகனங்கள் செல்ல உள் பாதைகள் அமைக்கவும், கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(எ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: தலைவர் அவர்களே, அறிக்கை யொன்று @ அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: பாதிக்கு மேல் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் முடிக்கப் படாத முக்கியமான எஞ்சிய பணிகள் எவை எவை? அத்துடன் பாலூட்டிகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபற்றிய விபரம், பெயர் பற்றிய விவரம் எல்லாம் அறிய விரும்புகிறேன். மேலும் கொடுக்கப்படாத சுவையாக இருக்கக்கூடிய வேறு ஏதாவது விவரங்கள் இருந்தால், அதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: பாலூட்டிகள், பறவைகள் என்று பல்வேறு தலைப்புகளில் நூற்றுக்கணக்கான பறவைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் படித்தால் நேரம் ஆகும். உறுப்பினர் அவர்களே, இதிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்கள் போதாது, மீண்டும் விவரங்கள் தேவை என்று கருதினால், தயவுசெய்து அந்தத் தலைப்பிலே கேள்வி போட்டால், இன்னும் விவரமாக பதில் தர முடியும்.

@ 350 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இந்தப் பூங்காவிற்குச் சென்று பார்க்கக் கூடியவர்களுக்கு வேண்டிய கேன்டின் வசதி சம்பந்தப்பட்ட வேலை முடிக்கப் பட்டு விட்டதா? பெரியவர்களும் குழந்தைகளும் அங்கே வந்து சுற்றிப் பார்த்து, ஒருநாள் பூராவும் தங்கி இளைப்பாற வேண்டிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளனவா ?

(முற்பகல் 10-05)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, சமீபத்தில் அங்கே போகிற பார்வையாளர்களின் வசதிக்காக, சிற்றுண்டி மற்றும் ஸ்நாக்ஸ் போன்ற தயாரிக்கப்பட்ட உணவு வகைகள், பானங்கள் ஆகியவைகளை வழங்குகிற வகையில் வனத் துறையில் பணியாற்றும் ஊழியர்கள் அமைத் திருக்கிற கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதோடு மற்ற பொருட்களை பூங்காவிற்கு வெளியில் விற்க தனியாருக்கு அனுமதி வழங்க ஏலத்தில் விடலாமா என்றும் பரிசிலனை இருக்கிறது. ஒருநாள் முழு வதும் அங்கே போய் தங்குபவர்களுக்காக, பகல் நேரத்தில் தேவையான மிகப் பெரிய உணவை நாம் வழங்கவில்லை என்றாலும், சிற்றுண்டி என்ற அளவில் பானங்கள் மற்றவைகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : தலைவர் அவர்களே, இந்த உயிரியல் பூங்கா, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தபோது, அப்போது முதலமைச்சராக இருந்த எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர் களும், இப்போது நிதியமைச்சராக இருக்கிற டாக்டர் நாவலர் அவர்களும் ஐதராபாத் சென்று அங்குள்ள உயிரியல் பூங்காவைப் பார்த்துவந்து, அந்த அடிப்படையில்தான் இங்கே அமைக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. அங்கே பகலில் கூட இரவு நேரம் போல் தோற்றமளிக்கும் வகையில் சில இடங் களை ஏற்படுத்தி இரவு நேரத்தில் மட்டும் வெளியில் வரும் பறவைகளையும் மிருகங்களையும் நாம் காணும் வாய்ப்பு இருக்கிறது. அதேபோல பகலில்கூட இருண்ட பகுதி இங்கே வண்டலூர் உயிரியல் பூங்காவில் அமைக்கப்பட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, பகல் காலத்தில் இருண்ட பகுதிகளாக சில இடங்களை மாற்றி, இருட்டுக்குள்ளே வருகிற பறவைகள், மற்ற மிருகங்களை ஐதராபாத் பூங்காவில் வைத்திருக் கிறார்களா என்ற விபரம் தெரியவில்லை. அப்படி இருந்தால் சங்கடமாக இருக்கும். அதற்கு குகை போன்றவைகள் எல்லாம் அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு அமைப்பு ஐதராபாத்தில் இருந்தால், அதைப்பற்றியும் பரிசிலிக்கலாம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இதுவரை அதற்கான செலவுத் தொகை எவ்வளவு? இன்னும் எவ்வளவு தொகை செலவிடப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, இதுவரை மொத்தம் செலவிடப்பட்டிருக்கிற தொகை சுமார் நான்கரை கோடி ரூபாய். ஏழு கோடி ரூபாய்க்கு இதற்காக திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றன.

Mortuary Vans.

* 230 *Q.*—Thiru A. MAYILSAMY : Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) the number of mortuary vans that were allotted to the Government General Hospital, Madras;

(*b*) the number of them in disrepair as on 2—4—1985 ;

(*c*) whether the Government are aware of the plight of poor people, consequent on the non-availability of mortuary vans; and

(*d*) if so, the steps taken by the Government thereon, to put them on road?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மூன்று.

(இ) ஒன்று மட்டும்.

(உ) ஆம்.

(எ) இரண்டு பிண ஊர்திகள் புதியதாக வாங்கப்பட்டன. அவை உபயோகத்தில் இருக்கின்றன.

திரு. அ. மயில்சாமி : தலைவர் அவர்களே, இந்த ஊர்திகள் மூன்று என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்ட அந்த நாளில் மூன்று ஊர்திகளும் பழுதடைந்து, அதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப் பழுதடைந்ததற்குக் காரணம் அவைகளை நீண்ட நாட்கள் பயன்படுத்தியதாலா அல்லது திடீரென்று பழுதடைந்தனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஏற்கெனவே டி.எம்.இசட். 6038, டி.எம்.பி. 9888, எம்.எஸ்.எஸ். 1154 ஆகிய வண்டிகள் பழுதடைந்த காரணத்தால் அவை பயன்படுத்தப்படாமல் இருந்தன. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், ஹெல்த் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் என்ற துறைக்கு